# DATE REVISED PRESS RELEASE

செய்தி வெளியீடு எண்:410 நாள்:02/06/2008

## தமிழ்நாட்டிலுள்ள ஹோட்டல்களில் உணவு பண்டங்களின் விலை குறைக்கப்படுகிறது – உணவு அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு

தமிழ்நாடு ஹோட்டல் உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் இன்று (2.6.2008) பிற்பகல் 12.00 மணியளவில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கலந்தாய்வு கூட்டம் நடத்தினார்கள். இந்த கலந்தாய்வு கூட்டத்தில் ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கத் தலைவர், வசந்தபவன் ஹோட்டல் உரிமையாளர் திரு.M.ரவி, செயலாளர்.திரு.R.சீனிவாசன், அன்னபூர்ணா ஹோட்டல் உரிமையாளர் திரு.D.சீனிவாசன் மற்றும் இதர சங்க நிர்வாகிகளும் பங்கு பெற்றனர்.

மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் ஹோட்டல்கள் சங்க நிர்வாகிகளுடன் நடத்திய கூட்டத்தில் மதிய உணவு மற்றும் இட்லி, தோசை போன்ற பொருட்களின் விலையை குறைக்க ஹோட்டல் உரிமையாளர்கள் சங்கம் ஏற்றுக் கொண்டது.

நடுத்தர உணவகங்களில் தற்சமயம் 2 இட்லி ரூ.8.00, சாதா தோசை ரூ.15.00, வடை ஒன்று ரூ.8.00, பொங்கல் ரூ.15.00, கிச்சடி ரூ.15.00 மற்றும் ஒரு கப் டீ ரூ.8.00 ஆகிய விலைக்கு மேல் விற்கப்படும் உணவகங்களில் தற்போதுள்ள விலையில் 10 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதம் வரை 3.6.2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் பிறந்த நாள் முதல் மேற்கண்ட உணவு பண்டங்களின் விலை குறைக்கப்படும். சாதம் 250 கிராம் சாம்பார், ரசம், மோர், கூட்டு, பொரியல், ஊறுகாயுடன் அளவு சாப்பாடு ரூ.20க்கு வழங்கப்படும்.

இந்த விலைகளுக்கு கீழ் ஏற்கனவே விற்பனை செய்துவரும் உணவகங்களில் தொடர்ந்து அதே குறைந்த விலையில் உணவு பண்டங்கள் வழங்கவும் ஒப்புக் கொண்டுள்ளனர்.

மேற்கண்டவாறு ஹோட்டல் பண்டங்களின் விலைகளை குறைக்க அனைத்து ஹோட்டல் உரிமையாளர்களும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்வது என்றும் இவ்வாறு விலை குறைக்கப்படுவதால் உணவுப் பண்டங்களின் தரம் எடை, ருசி போன்ற எதுவுமே குறைக்கப்படமாட்டாது என்றும், குறைக்கப்பட்ட விலைப் பட்டியல் வாடிக்கையாளர்கள் பார்வைக்கு நன்கு தெரியும்படி வைக்கவும், ஹோட்டல் உரிமையாளர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இன்று நடைபெற்ற கலந்தாலோசனை கூட்டத்தில் கூட்டுறவு (ம) உணவுத் துறை செயலாளர் திரு.க.சண்முகம், இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் திரு.க.ராஜாராமன், இ.ஆ.ப., உடன் இருந்தனர்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9